(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 12 (6).]

# பாராளுமன்றம்

## 12 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2014 ஒற்றோபர் 17 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2014 நவெம்பர் 03, திங்கட்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2740/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கடன் தொகைகளில் அறவிட முடியாக் கடன்களென பதிவழிக்கப்பட்டுள்ள கடன் தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப் பகுதியினுள் மக்கள் வங்கியால் அறவிட முடியாக் கடன்களென பதிவழிக்கப்பட்டுள்ள கடன் தொகை மொத்தக் கடன் தொகையில் எத்தனை சதவீதம் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3547/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தற்போதைய பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும்;

(ii) மக்கள் பணிகளை செயலாற்றுவதில் இலகுபடுத்துவதற்காக 2000 ஆம் ஆண்டிலிருந்து நம்பிக்கைப் பொறுப்புக்களை உருவாக்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும்;

(iii) மேற்படி நம்பிக்கைப் பொறுப்புக்களின் பெயர்களையும் அவைகள் கூட்டிணைக்கப்பட்ட திகதிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புக்களுக்காக வரிகள் செலுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறு இல்லையாயின், வரிகளின் பிரயோகமற்ற விடயங்கள் என்ன என்பதையும்;

(iii) நம்பிக்கைப் பொறுப்புக்களை ஒருங்கிணைத்ததின் நிமித்தமாக வருமானத்தில் ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த இழப்பு என்ன என்பதையும்;

(iv) ஒவ்வொரு நம்பிக்கைப் பொறுப்பினதும் குறித்தக் காட்டப்பட்ட இலக்குகள் தற்போதைய சூழ்நிலையில் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(v) மேற்படி நம்பிக்கைப் பொறுப்புகள் தொடர்பில் ஏதாவது துஷ்பிரயோகம் நடைபெறுகிறதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4264/ '13

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1950.04.05 ஆம் திகதி பிறந்துள்ள தேசிய இளவல் படையணிப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் திரு. டப்ளியூ.பீ.பி. ஜயசுந்தர தற்போது 64 வயதைத் தாண்டிய ஒருவர் என்பதையும்;

(ii) சேவை நீடிப்புகள் தொடர்பாக பொதுத் திறைசேரியும் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவும் தெரிவித்துள்ள எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாமல் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இவருக்கு சேவை நீடிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஓய்வுபெறும் வயதைப் பூர்த்தி செய்துள்ள ஓர் உத்தியோகத்தரை தொடர்ந்தும் சேவையில் வைத்திருப்பதால் அரசாங்கத்திற்கு மேலதிக செலவினை ஏற்க நேரிடுகின்றதென்பதையும்;

(ii) ஓய்வுபெறவுள்ள உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு சேவை நீடிப்புகளை வழங்குவதன் காரணமாக பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகளை இழக்கின்ற கீழ் மட்டத் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கடும் மன விரக்கதிக்கு உள்ளாகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில் மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரின் சேவை நீடிப்பை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4424/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை சீனத் துறைமுகம் சார்ந்ததாக புதிய சீமெந்து தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி உத்தேச தொழிற்சாலையை நிர்மாணித்தல் தொடர்பில் சுற்றாடல் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கையின் உள்ளடக்கத்தை இச்சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிப்பதால், மீன் வளம் அழியக்கூடிய அச்சுறுத்தல் உருவாகுமென முறைப்பாடுகள் அல்லது எதிர்ப்புகள் எழுந்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4468/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமைரிக்காவின் இலங்கை தூதரகம் Cranford Johnson Robinson Wood எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4677/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள டெங்கு நோயாளர் எண்ணிக்கையின் வளர்ச்சி 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட ஆண்டுகளில் டெங்கு நோய் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஆண்டுகளில் டெங்கு நோயினாலான மரணங்கள் அதிகளவில் அறிக்கையிடப்பட்ட மாவட்டங்களை ஒழுங்கு வரிசைப்படி அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) டெங்கு ஒழிப்புக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்கென கடந்த மூன்றாண்டுகளில் செலவிட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) அதன் மூலம் அடையப்பெற்றுள்ள பெறுபேறுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) டெங்கு ஒழிப்புக்கான பிரீஜ (BTI) பற்றீரியா இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(ii) குறித்த பற்றீரியாவை இறக்குமதி செய்வதற்காக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செலவிட்டுள்ள பணத் தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) பிரீஜ பற்றீரியாவை இலங்கையில் உற்பத்திச் செய்ய முடியுமா என்பதையும்;

(iv) அவ்வாறு செய்ய முடியுமாயின், இலங்கையில் பிரீஜ பற்றீரியாவைப் பயன்படுத்தாதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4773/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வைத்தியசாலைகளில் மருந்துகள் பற்றாக்குறைக்கு தீர்வாக பிரதேச ரீதியில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(ii) அதற்காக விலை மனுக்கள் பெறப்படுகின்ற முறை யாது;

(iii) மேற்படி விலை மனுக்களை மருத்துவ வழங்கல் பிரிவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iv) பேராதனை பொது வைத்தியசாலையில் மருந்துகளை கொள்வனவு செய்கின்றபோது நேரிட்டுள்ள மோசடிகள் தொடர்பாக அமைச்சு அறிந்துள்ளதா

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5087/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெல்தொட்ட பிரதேச செயலகத்துக்கு நிரந்தர பிரதேச செயலாளர் ஒருவர் நியமிக்கப்படாமை காரணமாக தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இவ்வலுவலகத்துக்கு வரும் மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், தெல்தொட்ட பிரதேச செயலகத்துக்கு உதவிப் பிரதேச செயலாளர் ஒருவரையேனும் நியமிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2014 நவெம்பர் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2742/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற 05 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களில் மாணவர் உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) சந்தையில் நிலவும் பொருட்களின் விலையேற்றத்துக்கு ஒப்பீட்டளவில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு போதியளவு மாணவர் உதவித் தொகையொன்றை வழங்குவாரா என்பதையும்;

(iv) இன்றேல் இந்த மாணவர் உதவித் தொகையை அதிகரிப்பாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின் அத் திகதி யாது என்பதையும்;

(vi) அதனை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ள பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3548/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை,

(i) திறைசேரி முறிகளை அல்லது திறைசேரி உண்டியல்களை வாங்கிய கம்பனிகள், நிறுவனங்கள் அல்லது கைத்தொழில் முதலீட்டாளர்கள் யார் என்பதையும்;

(ii) மேற்படி கடன் கருவிகள் விற்கப்பட்ட விகிதம், காலப்பகுதி என்ன என்பதையும்;

(iii) திறைசேரி உண்டியல்களை அல்லது திறைசேரி முறிகளை வாங்குபவர்களுக்கு நாணயமாற்றத்தின் உயர்வு காரணமாக இழப்பு ஏற்படும்பொழுது அதை அரசாங்கம் தாங்கிக்கொள்ளும் எனக்கூறி ஏதாவது உத்தரவாதம் வழங்கப்பட்டள்ளதா என்பதையும்;

(iv) அரசாங்கக் கடன் கருவிகளை வாங்கிய ஐந்து பெரிய முதலீட்டாளர்கள் அல்லது கைத்தொழில் முதலீட்டாளர்கள் யார் என்பதையும்;

(v) அரசாங்கத்தால் குறுங்காலம், இடைக்காலம், நீண்ட காலம் என்ற அடிப்படையில் விற்கப்பட்ட மொத்தக் கடன் கருவிகளை, அவற்றின் பெறுமானம் மற்றும் காலப்பகுதியை என்பவற்றுடனும்,

வருடாந்த அடிப்படையில் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4265/ '13

கௌரவ புத்திக பத்திரண,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் அதிவேகப் பாதையை மாத்தறை, கொடகம தொடக்கம் அம்பாந்தோட்டை, மத்தல வரை நீடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(ii) திஹகொடை, கிரிந்த மற்றும் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மிகவும் அண்மித்ததான தென் அதிவேகப் பாதைக்கு நுழைவிடமாக அப்பரெக்க வீதியை முன்மொழிந்து அளவை நடவடிக்கைகள்கூட மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) உத்தேசிக்கப்பட்ட அப்பரெக்க நுழைவுப் பாதையை மாற்றி அதனை கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவின் வலகந்த பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) நுழைவுப்பாதையானது மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுமெனில் அதிகளவிலான மக்களுக்கு அனுகூலங்கள் கிடைப்பதற்குள்ள வாய்ப்பு குறைவடையும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், தென் அதிவேகப் பாதைக்கான நுழைவிடத்தை மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றியமைக்காதிருக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4578/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓமந்தை தொடக்கம் காங்கேசன்துறை வரையிலான புகையிரதப் பாதையின் மொத்த நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இதற்கு அமைவாக மேற்படி பாதையில் ஒரு கிலோ மீற்றரை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டுள்ள பணத் தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4678/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் புகைத்தல் காரணமாக நாளாந்தம் மற்றும் ஆண்டுதோறும் மரணிப்பவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் புகைத்தல் காரணமாக மரணித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) புகைத்தல் காரணமாக ஆண்டுதோறும் நோய்வாய்ப்படுவோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அரசாங்கம் புகைத்தல் பொருட்கள் இறக்குமதியின் மூலம் ஈட்டும் வருடாந்த வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த ஐந்தாண்டுகளில்,

(i) புகைத்தல் காரணமாக நோய்வாய்ப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) புகைத்தல் பொருட்கள் இறக்குமதியின் மூலம் அரசாங்கம் ஈட்டியுள்ள வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) புகைத்தலை குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்களைக் காண்பிக்கும் விளம்பரங்களைத் தாங்கிய புகைத்தல் பொருள் பொதிகளை சந்தைக்கு வழங்கும் திகதி யாதென்பதையும்;

(iii) அதற்குத் தடைகள் எவையேனுமிருப்பின், அவை யாவை என்பதையும்;

(iv) அவ்வாறானதொரு புகைத்தல் பொருள் பொதியை அறிமுகம் செய்வதன் மூலம் புகைத்தல் பொருள் பாவனையைக் குறைப்பதற்கான இயலுமை உண்டா என்பதையும்;

(v) ஆமெனின், அது எவ்வாறு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5145/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தமது வாழ்வாதாரமாக தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களை தயாரிக்கும் கைத்தொழிலை செய்துவருகின்றவர்கள் உள்ள பிரதேசங்கள் அல்லது கிராமங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டவர்கள் தமது கைத்தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்காக வழங்கப்படும் உதவிகள் மற்றும் அது தொடர்பாக அமுலிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்கள் (தங்கம், வெள்ளி, இரத்தினக்கற்கள் மற்றும் பெறுமதிவாய்ந்த கல் வகைகள்) போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு ஏதேனும் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த வசதிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு உற்பத்திகளுக்கான அனுப்பாணைகளை பெற்றுக்கொடுக்கும் ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(v) உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் ஆக்கங்களை காட்சிப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்துவதற்குமான லக்சல போன்ற நிறுவனங்களுக்கு தங்க/வெள்ளி ஆபரணங்களை வழங்குகின்ற முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5148/ '14

கௌரவ துனேஷ் கங்கந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஓராண்டில் அனுமதிக்கப்படுகின்ற ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) யாதென்பதையும்;

(ii) கல்வியியற் கல்லூரிகளில் 2009 – 2013 வரையான ஒவ்வொரு ஆண்டிலும் ஓர் ஆசிரிய பயிலுநருக்கு வழங்கப்பட்டுள்ள மாதாந்தக் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி கஹவத்த ருவன்புர கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்த சனாதிபதி அவர்கள், மேற்படி கொடுப்பனவை ரூபா ஐயாயிரம் வரை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அந்த மாணவர்கள் முன்னிலையில் பகிரங்கமாக கூற்றொன்றை வெளியிட்டாரென்பதை அறிவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) சனாதிபதி அவர்களின் மேற்படி கூற்றுக்கமைய குறைந்த பட்சம் அடுத்த மாதத்திலிருந்தேனும், ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை ரூபா ஐயாயிரம் வரை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5175/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் பெற்றோலிய சுத்திகரிப்புத் தேவையை பூர்த்திசெய்வதற்கு சப்புகஸ்கந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் போதுமானதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சப்புகஸ்கந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கால எல்லைகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு நிறுத்தப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு அடிப்படையாயமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) புதிதாக எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணித்தல் அரசாங்கத்தின் முன்னுரிமையொன்றல்லாதிருப்பதற்கு காரணமாயமைந்த விடயங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 05, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2744 / ‘12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாணத்திலுள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதயும்;

(ii) மேற்படி பாடசாலைகளிலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அதிபர்களின் எண்ணிக்கை மற்றும் தகைமைகளற்ற அதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தகைமைகளை பூர்த்தி செய்யாத பதில் கடமையாற்றுகின்ற அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி பதில் கடமையாற்றுகின்ற அதிபர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அதிபர்களை இப்பாடசாலைகளுக்கு நியமிப்பாரா என்பதையும்;

(v) அதற்காக தேவைப்படும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3549/ ’13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 சனவரி 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் திவிநெகும சட்டமூலம் சட்டவாக்கம் செய்யப்பட்டபோது சமுர்த்தி வங்கிகளின் மொத்த மீதி என்ன என்பதையும்;

(ii) சமுர்த்தி வங்கியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா அல்லது புதிய வங்கியொன்று உருவாக்கப்பட்டள்ளதா என்பதையும்;

(iii) ஒவ்வொரு வருடத்திலும் சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறாக வருடாந்த அடிப்படையில் ஆரம்பத்தில் இருந்து இற்றைவரைக்கும் சமுர்த்தி வங்கியின் திரட்டிய மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சமுர்த்தி வங்கியிலே தமது சேமிப்புகளை இடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட வைப்பாளர்களுக்கு அவ்வங்கியால் செலுத்தப்பட்ட வட்டிவீதம் எவ்வளவு என்பதையும்;

(ii) அவர்களால் வைப்பு செய்யப்பட்ட மூலதனத்துக்கு செலுத்தப்பட்ட மொத்த வட்டி என்ன என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4266/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சிங்கராஜ வன ஒதுக்கத்தின் எல்லையில் அமைந்துள்ள என்சல்வத்த பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'Rainforest Eco Lodge' எனப்படும் ஹோட்டலின் காரணமாக வன ஒதுக்கம் பாரிய சுற்றாடல் சேதத்திற்கு உள்ளாகின்றதென்பதையும்;

(ii) மேற்படி ஹோட்டலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்கள் வனத்தினுள் அப்புறப்படுத்தப்படுவதன் காரணமாக காட்டில் வாழ்கின்ற கூருணர்வுமிக்க நிலத்தில் வாழும் உயிரினங்கள் மற்றும் நீரில் வாழும் உயிரினங்களின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இத்தகைய ஹோட்டல்களை நிர்மாணிப்பதானது வனத் தொகுதியின் இருப்பு தொடர்பில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட ஹோட்டலிலிருந்து சுற்றாடலுக்குப் பாதகமான தாக்கங்கள் ஏற்படுவதையும், வனங்களை அண்டியதாக ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படுவதையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4469/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை தூதரகம் Oorvis Communications எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5176/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வருடாந்த இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அறிக்கையிடப்பட்டுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5182/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு வரையான காலப்பகுதியில் தயட்ட கிருள, கம நெகும, மற்றும் இதர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பண்டுவஸ்நுவர தொகுதியில் புனரமைக்கப்பட்ட குளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பணிகள் நிறைவு செய்யப்பட்ட போது செலவிடப்பட்டிருந்த பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் ஏற்புடையதாக மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படைத் திட்டம் யாதென்பதையும்;

(ii) அதனை அங்கீகரித்த மற்றும் அதன் பிரகாரம் கொடுப்பனவுகளை அங்கீகரித்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களில், மதிப்பீட்டுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் அவ்வாறு செய்யப்படாத கருத்திட்டங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) மதிப்பீட்டுக்கமைய பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) அவ்வாறான கருத்திட்டங்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி கொடுப்பனவுகளை அங்கீகரித்த அலுவலர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5205/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவுஸ்திரேலியாவின், கென்பராவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு மேலதிகமாக மெல்பன் நகரத்தில் இலங்கை கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகமொன்றும் பேணிவரப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகம் எத்தேதியில் திறக்கப்பட்டதென்பதையும்;

(iii) மெல்பன் நகரத்தில் இலங்கை கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகமொன்று திறக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) தற்போது மேற்படி அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு கிடைத்துள்ள அனுகூலங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மெல்பனிலுள்ள இலங்கை கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகத்தில் கொன்சியுலராக செயற்படுபவரின் பெயர் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அங்கு பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் பெயர், பதவி, தொழில்சார் தகைமைகள், வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) கொன்சியுலர் உள்ளிட்ட மேற்படி உத்தியோகத்தர்களுக்கு அந்தந்த பதவிகளுக்கேற்ப வழங்கப்படுகின்ற சம்பள அளவுகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் உள்ளிட்ட மேலதிக வசதிகள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்

(vi) மாதாந்தம் மேற்படி அலுவலகத்திற்காக இலங்கை அரசினால் உறப்படுகின்ற மொத்த செலவுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5418/ '14

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஏற்புடையதான சட்டவாக்கச் சட்டம் யாதென்பதையும்;

(ii) மேற்படி சட்ட நிலைமையின் கீழ் மகாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒழுங்குமுறையாக்கல் சபையிலுள்ள அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) சட்ட நிலைமையின் கீழ் குறிப்பிட்ட ஒழுங்குமுறையாக்கல் சபை எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை கூடுகின்றதென்பதையும்;

(iv) கடந்த ஆண்டினுள் மகாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒழுங்குமுறையாக்கல் சபை எத்தனைத் தடவைகள் கூடியுள்ளன என்பதையும்;

(v) குறித்த கூட்டங்களில் மாணவர் பிரதிநிதிகளின் பங்கேற்பும் இடம்பெற்றுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மகாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணம் தனியார் நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருப்பின், அவ்வாறு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற அனுகூலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி முதலீட்டின் ஊடாக ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருப்பின், குறிப்பிட்ட நட்டத்திற்கு பொறுப்புக் கூறுகின்றவர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2014 நவெம்பர் 07, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2745/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெல்கந்த சந்தை ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதையும்;

(ii) தெல்கந்த சந்தையை நிர்வகிக்கின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(iii) தெல்கந்த சந்தை நடாத்தப்படுகின்ற நிலத்தின் தற்போதைய உரிமையாளர்கள் யாவரென்பதையும்;

(iv) மேற்படி சந்தையில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தெல்கந்த சந்தை அகற்றப்படுவதால் அநீதிக்குள்ளாகின்ற வர்த்தகர்களுக்கு நியாயம் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) தெல்கந்த சந்தை அகற்றப்படுமெனில் அதற்காக வழங்கப்படும் மாற்று வழிமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாற்று வழிமுறைக்காக செலவாகும் நிதி எவ்வளவென்பதையும்;

(iv) அது நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

3550/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்லும் மற்றும் 2012ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான காலப்பகுதியிலும் முதலீட்டுச் சபை அல்லது வேறு ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினூடாக தனியார் துறையினருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர் களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க காணிகளின் விஸ்தீரணத்தையும்;

(ii) ஒவ்வொரு காணியினதும் பெறுநர், விற்பனை விலை, விஸ்தீரணம், அமைவிடம், கொள்வனவுக்கான நோக்கம் என்பவற்றை தனித்தனியாகவும்;

(iii) 2010ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணி ஒவ்வொன்றிலும் சம்பந்தப்பட்ட வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இல்லாவிடின், வியாபாரத்தை ஆரம்பிக்க எடுக்கும் காலத்தையும்;

(v) மேலே (i) இன் பிரகாரம் கொடுக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக முதலீட்டின் மொத்தப் பெறுமதியையும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4267/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சிங்கராஜ வனத்தின் அருகாமையில் குடியிருப்போர் அதன் வன ஒதுக்குப் பிரதேசங்களை வேகமாக துப்புரவு செய்து அனுமதியின்றி தேயிலைச் செய்கையை மேற்கொள்கின்றனர் என்பதையும்;

(ii) இதன் காரணமாக உலக மரபுரிமையான சிங்கராஜ வனம் சடுதியாக சிறிதாகி வருகின்றதென்பதையும்;

(iii) வன ஒதுக்கத்தைச் சூழ்ந்து அமைந்துள்ள, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காடுகளை சிங்கராஜ வன ஒதுக்கத்திற்குச் சுவீகரித்துக்கொள்வதன் மூலம் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தலாம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை சிங்கராஜ வன ஒதுக்கத்திற்காக சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சிங்கராஜ வன ஒதுக்கத்திற்குச் சொந்தமான மாணிக்கவத்த பிரதேசத்தில் சுமார் 300 ஏக்கர் காட்டுப் பிரதேசத்தை குருகே மெனிக் எனப்படும் தொழில்முயற்சியின் உரிமையாளர் பலவந்தமாகக் கைப்பற்றிக்கொண்டு இரத்தினக் கல் அகழ்வுக்கு தயாராகி வருகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) அத்தகைய நடவடிக்கை இடம்பெறுமெனில் வன ஒதுக்கத்தினுள் பல சுற்றாடல் பிரச்சினைகள் உருவாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிலைமையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4579/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கெசினோ சூதாட்டத்திற்கென 2012 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கெசினோ நிலையங்கள் கொண்டுநடாத்தப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் உரிமப்பத்திரம் இன்றி கெசினோ நிலையங்கள் கொண்டுநடாத்தப்படுவதாக அறியவந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், மேற்படி கெசினோ நிலையங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4774/ '14

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பிரதானமான ஔடத வலயத்தினுள் இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி ஒப்பந்தக் கம்பனியின் பெயர் என்ன;

(iii) மேற்படி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5099/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரஜரட்ட விவசாயிகள் வறட்சிக் காலங்களில் நீர்ப் பற்றாக்குறை காரணமாக தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் 21 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், நிலக்கீழ் நீர் மட்டத்தை தக்க வைத்துக்கொள்ள இயலுமான விதத்தில் அனைத்து வாவிகளையும் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ள வாவிகள் யாவை;

(iv) வறட்சிக் காலங்களில் விவசாயிகள் முகம்கொடுக்கும் நீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்காக மழை நீரை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5206/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொலன்னாவையிலிருந்து மத்தளை சர்வதேச விமான நிலையம் வரை விமான எரிபொருளை ஏற்றிச்சென்ற LY 5467 இலக்கமுடைய பவுசர் வண்டி 2014 ஏப்ரல் 12 ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் சூரியவெவ மீகஹஜதுர சந்தியில் விபத்துக்குள்ளாகி தீப்பற்றி அழிவுற்றமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி எரிபொருள் பவுசர் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருந்ததா என்பதையும்;

(ii) அது தனிப்பட்ட நபரொருவருக்கு சொந்தமானதாக இருந்ததாயின் அதன் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iii) மேற்படி பவுசருக்குள் ஏற்றிச்செல்லப்பட்டுக்கொண்டுருந்த எரிபொருளின் அளவு எத்தனை லீற்றர்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தீப்பற்றி எரிந்த மேற்படி பவுசரின் தீயை அணைப்பதற்கு தீயணைக்கும் வண்டி வந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வாகனம் வருகைத்தந்த நேரம் யாது மற்றும் தீயணைக்கும் வண்டி எந்த நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதையும்;

(iii) சம்பந்தப்பட்ட வண்டி தீப்பற்றி எரிந்த இடத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ள தீயணைக்கும் பிரிவு பேணிவரப்படுகின்ற நிறுவனம் மற்றும் இடம் யாதென்பதையும்;

(iv) மேற்படி (i) க்கு ஏற்புடையதான தீயை அணைப்பதற்கு மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் தீயணைக்கும் பிரிவு அழைக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5260/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெல்தோட்டை நகரத்திலிருந்து தெல்தோட்டை அரசாங்க வைத்தியசாலை, மலைமகள் இந்து மத்திய மகா வித்தியாலயம், தெல்தோட்டை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய இடங்களுக்குப் பிரவேசிப்பதற்கான பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் சிதைவடைந்துள்ளது என்பதையும்;

(ii) சிதைவடைந்துள்ள வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தெல்தோட்டை பிரதேச வாசிகளின் நலன் கருதி மேற்படி வீதியை மிக விரைவாக புனரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 08, சனிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2746/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இயங்குகின்ற உள்நாட்டு சத்திரசிகிச்சை சல்லாத்துணி (GAUZE) கைத்தொழில் சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில்சாலைகளில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அரச வைத்தியசாலைகளுக்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற சத்திரசிகிச்சை சல்லாத்துணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) அரச வைத்தியசாலைகளுக்கு உள்நாட்டு சத்திரசிகிச்சை சல்லாத்துணி கொள்வனவு செய்வதை குறைத்துள்ளதன் காரணமாக வீழ்ச்சியடைந்து வருகின்ற மேற்படி கைத்தொழிலை பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3551/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோல்டன் கீ மற்றும் நஷ்டமடைந்த செலின்கோ துணைக் கம்பனிகளுக்கு நட்டஈடு வழங்கப்படுமென நிதி, திட்டமிடல் அமைச்சரினால் முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியற் குற்றச்சாட்டின் போது மேற்கொள்ளப்பட்ட கூற்றானது சரியானதாவெனவும்;

(ii) அவ்வாறாயின், நட்டஈடு வழங்கப்பட்டது அல்லது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவது எப்போது என்பதையும்;

(iii) மேற்சொன்ன கம்பனிகளின் முதலீட்டாளர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவையையும்;

(iv) அக்கம்பனிகளிலுள்ள சொத்துக்கள் மற்றும் ஒதுக்கங்கள் மூலம் செலுத்தக்கூடிய சதவீதத்தையும்;

(v) விற்பனை செய்யப்பட்ட ஒவ்வொரு கம்பனியினதும் பெயரை பெற்றுக்கொண்ட தொகையுடனும்;

(vi) மீதியாகவுள்ள தொகைக்கான கொடுப்பனவுத் திட்டத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) கோல்டன் கீ கம்பனியானது செலின்கோ குழுமத்திலிருந்த தோல்வியுள்ள செலின்கோ துணைக் கம்பனிகள் மற்றும் ஏனைய கம்பனிகள் ஆகியவற்றின் கீழிருந்த நிறுவனங்களையும்;

(ii) ஒவ்வொரு கம்பனியும் விற்பனை செய்யப்பட்ட பெறுமதியையும்;

(iii) விலை மதிப்பீட்டாளரையும்;

(iv) வீழ்ச்சியடைந்த திகதியில் உள்ளவாறு அக்கம்பனிகளின் இறுதியான ஐந்தொகைகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4268/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்தில் சிறப்பியல்புவாய்ந்த சுற்றாடல் முறைமையுடன் கூடிய பதவிய வனம் ஒதுக்கமொன்றாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அதன் சிறப்பியல்புவாய்ந்த முக்கியத்துவத்தின் காரணமாகவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அந்த ஒதுக்கத்திலிருந்து 12900 ஹெக்டயார் பகுதியை மீள்குடியேற்றுகின்ற மற்றும் அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகளுக்காக வர்த்தமானப் பத்திரிகையொன்றின் மூலம் மீண்டும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி ஒதுக்கத்திலிருந்து ஒரு பகுதியை இழத்தலானது பிரதேசத்தில் பல காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள் ஏற்படுவதற்கு ஏதுவாயமையும் என்பதையும்;

(v) இந்த நிலைமை பதவிய வாவியை முதன்மையாகக் கொண்ட வாவி முறைமையின் இருப்பு தொடர்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், இந்த நிலைமையை தடுப்பதற்காக துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4580/ '13

கௌரவ அநுர திசாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினங்களில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் தலைவர்களின் மாநாட்டுக்காக வெகுசன ஊடக, தகவல் அமைச்சு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களால் ஏற்கப்பட்ட மொத்தச் செலவுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இப் பணத்தொகை பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்;

(iii) இப் பணத்தொகை செலவிடப்பட்ட முறை யாது என்பதையும்;

(iv) மேற்படி நாட்டுத் தலைவர்களின் மாநாட்டுக்கான ஊடக பிரச்சாரப் பணிகளுக்காக ஏற்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) பிரச்சாரப் பணிகள் வழங்கப்பட்ட மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஊடக நிறுவனத்தின் சார்பிலும் செலுத்தப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4679/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சின் செயலாளரினால், வட மத்திய மாகாணத்தில் நிலவும் சிறுநீரக பிரச்சினையை தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட கல்விமான்கள் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குழு எப்போது நியமிக்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி குழு இதுவரை எத்தனை தடவைகள் கூடியுள்ளதென்பதையும்;

(iv) அதன் இறுதி அறிக்கை கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி குழுவினால் அந்த அறிக்கை யாரிடம் கையளிக்கப்பட்டதென்பதையும்

(vi) மேற்படி அறிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அறிக்கையின் விதப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நான்கு விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறு தடை செய்யப்பட்டுள்ள விவசாய இரசாயனப் பொருட்கள் இன்னமுமே சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பீடை கொல்லிகள் யாவை என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி ஒவ்வொரு பீடை கொல்லி வகையினதும் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) அவற்றின் தரம் பரிசோதிக்கப்பட்டதா என்பதையும்;

(vi) ஆமெனில், பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் இடம் யாதென்பதையும்;

(vii) மேலே குறிப்பிடப்பட்டவாறு தரப் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4775/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் பதிவு செய்யப்பட்ட மருந்தகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்நாட்டில் இருக்கின்ற பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்களின் எண்ணிக்கை மற்றும் மருந்து விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) எமது நாட்டுக்குத் தேவையான மருந்தாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மருந்தாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறையியலொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5100/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு தெங்கு உற்பத்தியின் வீழ்ச்சியில் மைட்டா தொல்லை கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா;

(ii) 2010ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கையின் வருடாந்த தெங்கு விளைச்சல் வெவ்வேறாக யாது;

(iii) கடந்த ஐந்து வருட காலத்தினுள் வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி காலகட்டத்தில் தேங்காய் ஏற்றுமதியின் மூலம் வருடாந்தம் பெறப்பட்ட வருமானம் யாது;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் காணப்பட்ட தெங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த மூன்று வருட காலத்தினுள் தெங்குப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்கும் அப்பயிர்ச்செய்கை முகம்கொடுக்கும் தொல்லைகளுக்கும் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் யாவை;

(ii) தெங்குப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக்காக மேற்படி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆராய்ச்சிகள் யாவை;

(iii) குறித்த ஆராய்ச்சிகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை;

(iv) தெங்கு ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் மேம்படுத்துவதற்குமாக மேற்படி விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5183/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 300 மெ.வொ. கொள்ளளவுடன் கூடிய முதலாவது கட்டத்தின் தற்போதைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்கின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பொறுப்பு கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் பராமரிப்பு பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதற்காக அதன் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட சீன கம்பனிக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2014 நவெம்பர் 10, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2747/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நீர்வழங்கல்,வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கேகாலை மாவட்டத்தின் யட்டியாந்தோட்ட குடி நீர் கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யட்டியாந்தோட்ட குடி நீர் கருத்திட்டமானது வெற்றியளிக்காததொரு திட்டமொன்றென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உரிய முறையில் சுத்திகரிக்கப்படாது வழங்கப்படுகின்ற நீருக்காக நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை கட்டணம் அறவிடுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) நீர் வடிகட்டி இயந்திரங்கள் பொருத்தப்படாத மேற்படி பம்பி நிலையத்தின் அசுத்தமான நீரை அப்பிரதேசத்து மக்களுக்கு குடி நீராக விநியோகித்து அதற்காக அநீதியான முறையில் நீர் கட்டணம் அறவிடுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3552/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாறாக நாட்டிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கையையும்;

(ii) மேலும் பாதுகாப்பான முறைகளைப் பயன்படுத்தி பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் தொடர்பாக நடவடிக்கைகளை ஏன் மேற்கொள்ள முடியாதென்பதையும்;

(iii) மேற்கூறிய பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் பணிபுரியும் ஆட்களின் எண்ணிக்கையையும்;

(iv) அத்தகைய பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளுக்கான ஆண்டுக்கான மொத்தச் செலவினத்தையும்;

(v) 2010ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இப்பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் இடம்பெற்றுள்ள இறப்புகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4323/ '13

கௌரவ புத்திக பத்திரண,— வன சீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொல்லிக்குளம் – சிலாவத்துறை வீதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான சரளைக் கற்களைப் பெற்றுக்கொள்வதற்காக வில்பத்து தேசிய வனப் பூங்காவின் 4ஆம் இலக்க வலயத்திற்குரிய பொரளுவல பிரதேசத்தில் பாரியளவில் சரளைக் கல் அகழ்வு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) தந்திரிமலை வன சீவராசிகள் வீச்சிடை அலுவலகத்தின் வீச்சிடை வன பாதுகாப்பு உத்தியோகத்தரின் அனுசரணை இதற்கு கிடைப்பதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1937ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 3,5,6 ஆம் பிரிவுகள் அனைத்தும் மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயலின் காரணமாக மீறப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், மாக பொறியியல் தனியார் கம்பனிக்கு மேற்படி பிரதேசத்தில் சரளைக் கற்களை அகழ்வதற்கான சிபாரிசை வழங்கியவர் யார்;

(iii) வில்லுபத்து தேசிய வனப் பூங்காவில் நடைபெறும், சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் மேற்படி செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4581/ '13

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அரச வருமானம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி இரண்டு ஆண்டுகளுக்காகவும் அரசாங்கம் பெற்றுள்ள கடன்களுக்காக செலுத்தப்பட்ட வட்டித் தொகை மற்றும் கடன் தவணைப் பணம் வருடாந்தம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்ட கடன் மற்றும் வட்டித் தவணைகளின் கூட்டுத்தொகை வருடாந்த அரச வருமானத்தின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5177/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் நிவாரணத்தை நடைமுறைப் படுத்துவதில் ஏதேனும் ஊழல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) எரிபொருள் நிவாரணம் வழங்கும் செயற்பாட்டில் ரூபா 500 மில்லியன் மோசடி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரினால் ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட கூற்றில் உண்மையேதும் உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறானதொரு ஊழல் இடம்பெற்றிருப்பின் அது தொடர்பாக பொலிசுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அந்த விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5198/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கா மிரர் (Sri Lanka Mirror) எனப்படும் இணையத்தளம் வெகுசன ஊடக, தகவல் அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி பதிவுக்காக அறவிடப்பட்ட கட்டணம் யாதென்பதையும்;

(iv) உரியவாறு பதிவுசெய்யப்பட்டுள்ள மேற்படி இணையத்தளத்தை கொண்டுநடாத்தும் இடத்தை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பரிசோதனைக்கு உள்ளாக்கி அங்கிருந்த கணனிகளை அவர்களது பொறுப்பின் கீழ் கொண்டுவந்துள்ளார்களா என்பதையும்

(v) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது மேற்படி நடவடிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2 அடிப்படை மனித உரிமைகள் வழக்குகளுக்கு ஏற்புடையதாக வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் படி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட கணினிகள் மீண்டும் ஸ்ரீ லங்கா மிரர் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) வெகுசன ஊடக, தகவல் அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒரு செய்தி இணையத்தளத்திற்கு ஏற்புடையதாக இணைய வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் சேவை தொடர்ச்சியாகவே தடைபடுமெனில் அந்த அமைச்சினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5261/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்.— (1)

(அ) (i) பேருவளை நகரசபைக்குச் சொந்தமான பேருவளை, மருதானை அராபி வீதி தற்போது கடுமையாக சிதைவடைந்துள்ளது என்பதையும்;

(ii) மழைக் காலங்களில் அந்த வீதியில் காணப்படும் குழிகளில் தண்ணீர் நிரம்பி சேறாகின்ற நிலைமை காணப்படுவதால், குறித்த வீதியைப் பயன்படுத்துகின்ற பிரதேசத்திலுள்ள மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி மேலே குறிப்பிடப்பட்ட வீதியை துரிதமாக புனரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5420/ '14

கௌரவ அஜித் குமார,— நீர்ப்பாசன, நீரக வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில், கும்புக்கன் ஓயாவுக்கு குறுக்காக 800 ஏக்கர் அளவான நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக மொனராகலை மாவட்டத்தில், மிளகு மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைக்கு பாரிய தாக்கம் ஏற்படுமென்பதையும்;

(iii) இதனால் மேற்படி பிரதேச மக்களின் பொருளாதார செயற்பாடுகள் தடைப்படுமென்பதையும்;

(iv) நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக பிரதேசத்தில் பாரியளவில் வனங்களுக்கான சேதமும் சுற்றாடல் சேதமும் நடைபெறுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட நீர்த் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி யாது என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 11, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2752/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— வனசீவராசிகள், வனப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மடுவீதி சரணாலயத்திற்கு சொந்தமான மொத்தக் காணியின் அளவு எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சரணாலயத்தில் இடம்பெறுகின்ற மண் வெட்டியகற்றப்படுதல் காரணமாக வன விலங்குகளுக்கும் வனத்திற்கும் சேதம் ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) ஏற்கனவே, சரணாலய ஆளுகைப் பிரதேசத்தில் 10 ஏக்கர் காணியில் மண் வெட்டியகற்றப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மடுவீதி சரணாலய ஆளுகைப் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற மேற்படி மண் வெட்டியகற்றப்படுவதை தடுத்துநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) மண்ணை வெட்டியகற்றுவதற்கு உடந்தையாயிருந்தவர்களுக்கும் மண்ணை வெட்டியகற்றியவர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3553/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் காணிகளின் ஏக்கர் அளவை மாவட்ட அடிப்படையிலும்;

(ii) அக் காணிகள் வர்த்தக அபிவிருத்திக்காகக் கிடைக்கக்கூடியதாகவுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறில்லையெனின், இவ்வாறான உயர் பெறுமதி கொண்ட காணிகள் ஏன் வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) புகையிரதத் திணைக்களத்தின் ஏதாவது காணி தனியார் துறையினருக்கோ அல்லது வேறு ஏதாவது கம்பனிக்கோ வழங்கப்பட்டுள்ளதா எனப்தையும் அவர் கூறுவாரா?

(இ) மேலே (ஆ) இல் உள்ளவாறு காணிகள் வழங்கப்பட்டிருப்பின் அவற்றை வெவ்வேறாக, காணி அடிப்படையில் அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(i) கொடுக்கப்பட்ட காணியின் அளவு பேர்ச்சஸ்களில் அல்லது ஏக்கர்களில்;

(ii) விலை;

(iii) அவை கொடுக்கப்பட்ட காலவளவு;

(iv) பரிமாற்றத்தின் தன்மை (வேண்டப்பட்ட அல்லது வேண்டப்படாத);

(v) வழங்கப்பட்ட நபர்;

(vi) அது பயன்படுத்தப்படும் நோக்கம்

(ஈ) இன்றேல், ஏன்?

4425/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வலு, சக்திஅமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் உற்பத்தி நிலையம் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) செயலிழக்கச் செய்வதன் மூலம் ஏற்பட்ட மின் உற்பத்தி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறானதொரு செயலிழப்பு காரணமாக இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4433/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இந்திய பாதுகாப்பு அமைச்சரால் லோக் சபாவில் வெளியிடப்பட்ட கூற்றுக்கு அமைவாக இந்தியா இலங்கையிலிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி ஆயுத கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்ட திகதி தென்பதையும்;

(iii) இந்தியாவினால் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத வகைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆயுத விற்பனையின் மூலம் இலங்கைக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல் வாங்கலின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துகின்ற அறிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4473/ '13

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாத்தறை உயன்வத்த விளையாட்டு மைதானம், மாவட்ட மற்றும் அகில இலங்கை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தப் பயன்படுத்தப்படும் பொது விளையாட்டு மைதானம் என்பதையும்;

(ii) மாத்தறை நகரவாசிகள் பலர் இம்மைதானத்தை நாளாந்தம் தனது உடல் நலத்துக்காக உபயோகிக்கின்றனர் என்பதையும்

(iii) மாத்தறை மாநகர சபையினால் இம்மைதானத்தை இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தினால் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விளையாட்டு மைதானம் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தினால் விற்பனை செய்யாவிட்டால் இப்பிரதேச மக்களுக்கு பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின் இவ்விளையாட்டு மைதானம் விற்பனை செய்யப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4505/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டில் (CHOGM) பங்கேற்ற அரச தலைவர்கள் மற்றும் அதிதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த சுற்றுலாத்துறை ஹோட்டல்களின் எண்ணிக்கை யாது;

(ii) இதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு;

(iii) மேற்படி மாநாட்டில் பங்கேற்ற அதிதிகளுக்காக உணவு வழங்கலை மேற்கொண்ட ஹோட்டல்களின் எண்ணிக்கை யாது;

(iv) இதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5149/ '14

கௌரவ துனேஷ் கன்கந்த,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பலாங்கொட தேர்தல் தொகுதியில், இம்புல்பே பிரசேத செயலாளர் பிரிவுக்குரிய பம்பஹின்ன, கும்பல்கம, முத்தெட்டுவேகம, தியவர கிராமம் மற்றும் கிங்சிகுனே ஆகிய கிராமங்களில் வதியும் மக்கள் நீண்ட காலமாக கடுமையான குடிநீர் பற்றாக்குறைக்கு முகம்கொடுத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் முகம்கொடுக்கும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரச்சினையை தீர்ப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதுமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு போதியளவு வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல் தொடர்பில் கவனம் செலுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5208/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உயர் ஸ்தானிகர் அலுவலகங்களை பேணிவருகின்ற நாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள உயர் ஸ்தானிகர்களின் பெயர்கள் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவையென்பதையும்;

(iii) உயர் ஸ்தானிகர் பதவிகளுக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உயர் ஸ்தானிகர் அலுவலகங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் மாதாந்தம் உறப்படும் மொத்த செலவினம் யாதென்பதையும்;

(v) இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகம் நிறுவப்பட்டுள்ள நாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) மேற்படி நாடுகள் யாவையென்பதையும்

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 12, புதன்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2754/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மே மாதத்தில் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஐக்கிய அமெரிக்க குடியரசுக்கு விஜயம் மேற்கொண்டாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதுபற்றிய கால விவரங்கள் யாவை என்பதையும்;

(iii) இவ்விஜயத்தில் கலந்துகொண்ட ஏனையவர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவ்விஜயத்தின் போது அமெரிக்க இராஜாங்க செயலாளர் திருமதி ஹிலாரி கிளிண்டனுடனானதொரு சந்திப்பு நடைபெற்றதா என்பதையும்;

(v) அதன்போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் முடிவுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான "செயற்பாட்டுத் திட்டம்" அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு கையளிக்கப்பட்டதா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அச்செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பிரதானமான பகுதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3554/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையிலான,

(i) இலங்கையில் திறக்கப்பட்டுள்ள முழுமையான ஒருங்கிணைக்கப்பட்ட மீன் தகரத்திலடைக்கும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையையும்;

(ii) முழுமையாக இலங்கைக்கு உரித்தான ஒருங்கிணைந்த செயற்பாடொன்று பின்பற்றப்படுகின்றதாக அல்லது மேற்சொன்ன தொழிற்சாலைகளைப் ஏற்றுமதி செய்வதற்காக மட்டும் மீன் தகரத்திலடைத்தல் இடம்பெறுகின்றதா என்பதையும்;

(iii) இலங்கையில் இயங்கும் ஒவ்வொரு மீன் தகரத்திலடைக்கும் தொழிற்சாலையினதும் முதலீட்டுப் பெறுமதியையும் தொழில் உருவாக்கத்தையும் வெவ்வேறாகவும்;

(iv) ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உற்பத்தி செய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் அளவை மெட்ரிக் தொன்னிலும்

அவர் கூறுவாரா?

(ஆ) இலங்கை பிரதானமாக எந்நாடுகளிலிருந்த தகரத்திலடைக்கப்பட்ட மீன் இறக்குமதி செய்யப்படுகின்றது என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3961/ '13

கௌரவ புத்திக பதிரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இந்தியாவின் பட்டியாலா பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் 2013.02.24 முதல் 2013.02.28 ஆம் திகதி வரை நடைபெற்ற ஆறாவது தெற்காசிய பல்கலைக்கழக கலாசார விழாவில் பங்கேற்ற அழகியற் கலை பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய குழு மிகத் திறமையான குழுவாகவும் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவாகவும் தெரிவு செய்யப்பட்டதாக இந்நாட்டு பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன என்பதையும்;

(ii) எனினும், மேற்படி விழாவின் போது கலாசார அம்சங்கள் சமர்ப்பிக்கப்பட்டதேயன்றி போட்டிகள் இடம்பெறவில்லை என்பதையும்;

(iii) மேற்படி விழாவில் பங்கேற்றமைக்கான சான்றிதழ் ஒன்றை மாத்திரம் பெற்றுக்கொண்ட இக்குழுவை முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவாகக் காட்டி கௌரவ உயர் கல்வி அமைச்சர் உள்ளிட்ட கல்விமான்களை அழைத்து பெருந்தொகையான பணத்தை செலவிட்டு போலியான பாராட்டு விழாவொன்று நடாத்தப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி மோசடியான செயல் அழகியற் கலை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் திரு. ஜயசேன கோட்டேகொடவினால் தனது புதல்வரான திரு. ஜானக கோட்டகொடகேவிற்காக மேற்கொள்ளப்பட்டதென மேற்படி பல்கலைக்கழகத்தின் கட்புலக் கலைகள் பீடத்தின் மாணவர் சங்கத்தின் செயலாளர் குற்றம்சாட்டுகின்றார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மோசடிச் செயல் சம்பந்தமாக முறைசார்ந்ததொரு விசாரணையை நடாத்தி தவறாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4419/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை மகாவலி அதிகாரசபையின் வலவ விசேட ஆளுகைப் பிரதேசத்தின் கீழ் காணப்படுகின்ற, எம்பிலிபிட்டிய கடதாசித் தொழிற்சாலைக்கு சொந்தமான சுமார் 500 ஏக்கர் காணியில் உள்ள,

(i) உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டடங்கள் ஆகியன தற்போது பாவனைக்கு எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ளமை தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(iii) காணிகளிலுள்ள மரங்களையும் மரங்களின் பகுதிகளையும் வெட்டி ஏற்றிச் செல்லப்படுதல் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) காணிகள், கட்டடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பதற்காக ஏதேனுமொரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4627/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திற்கிணங்க அவ்வாண்டில் நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் மூலம் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அமைத்து முடிக்கப்பட்ட புதிய வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

(iv) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்களிலிருந்து அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4636/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 வரவுசெலவு திட்டத்தின் மூலம் கமக்காரர்களுக்கான ஓய்வூதியம் வழங்கும் வயது 63 வரை நீடிக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்தில் 60 வயதில் கமக்காரர் ஒய்வூதியம் வழங்குதல் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அது 63 வயது வரை நீடிக்கப்பட்டமையினால் அச்சட்டம் மீறப்படுதல் நடைபெறுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறின்றேல், 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு நவம்பர் வரை தவணைக் கட்டணத்தை செலுத்தி ஓய்வூதியத்திற்கான தகைமையை பெற்றவர்களுக்கு நிலுவை ஒய்வூதியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கமக்காரர் ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு 18 வயது முதல் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கமக்காரர் ஓய்வூதியத்திற்காக நிதி, திட்டமிடல் அமைச்சு, கொவி செத லொத்தர் மற்றும் விவசாயிகளின் பங்களிப்பு வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4847/ '14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கையில் சூதாட்ட வியாபாரத்தை மேற்கொள்வதற்கு இது வரைக்கும் விநியோகிக்கப்பட்டள்ள உரிமங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய உரிமங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்கள் மற்றும், அல்லது கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) அவ் உரிமங்கள் ஒவ்வொன்றும் வழங்கப்பட்ட திகதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4944/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இணைச் சுகாதாரம் என்றழைக்கப்படுகின்ற தாதி மற்றும் உதவி மருத்துவச் சேவைகள் பட்டப் பாடநெறிக்குரிய காலஎல்லை யாது என்பதையும்;

(ii) தற்போது மேற்படி பட்டப் பாடநெறியைக் கற்கின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி பட்டப் பாடநெறிக்கு, வருடாந்தம் அனுமதிக்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நான்கு வருட பட்டப் பாடநெறியொன்றாக திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பாடவிதானம் தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி பட்டப் பாடநெறியின் காலஎல்லை தற்போது மூன்று வருடங்கள் வரை குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நான்கு வருட பாடநெறியாக பாடவிதானம் தயாரிக்கப்பட்டிருந்த மேற்படி பட்டப் பாடநெறியை மூன்று வருடங்களில் நிறைவு செய்யும் ஆற்றல் உள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பட்டப் பாடநெறியின் கற்கைக் காலஎல்லை குறைக்கப்பட்டதன் காரணமாக குறித்த மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 13, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2755/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2012 மே மாதம் தொடக்கம் நுவரெலியா மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு தினமும் ஒரு கோப்பை பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கோப்பை பால் வழங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவ்வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் போது ஒரு லீட்டர் பாலுக்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

(ii) இவ்வேலைத்திட்டத்திற்காக ஒரு மாதத்திற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கோப்பை பால் வழங்கும் திட்டம் நுவரெலியா மாவட்டத்தில் தற்போது வெற்றிகரமாக செயற்படுகின்றதா என்பதையும்;

(iv) அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் தினமும் ஒரு கோப்பை பால் வழங்கும் திட்டத்தை நாடு பூராகவும் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3246/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கைப் புகையிரதத் திணைக்களம் தொடர்பில்,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3713/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி நிதியத்திற்குக் கிடைத்துள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சனாதிபதி நிதியத்தினால் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) ஒவ்வொரு துறை ரீதியாக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சனாதிபதி நிதியத்தினால் மருத்துவ சிகிச்சைகளுக்கு உதவி வழங்குவதற்காக ஆட்களைத் தெரிவு செய்கின்ற அடிப்படை யாது என்பதையும்;

(ii) கடந்த 03 வருட காலப்பகுதிக்குள் பிரதேச சபைகள், மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற உறுப்பினர்களுக்காக மருத்துவ சிகிச்சைகளுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து உதவி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3925/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) பெருந்தொகையான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் மூலமாக அதிக சம்பளம் கிடைக்கின்ற திட்டவட்டமான தொழில்களுக்காக ஆற்றுப்படுத்துவதாக கூறி வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற ஊழியர்கள் வெளிநாடுகளில் குறைந்த சம்பளம் பெறுகின்ற தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) போலியான தகவல்களை வழங்கி ஊழியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கின்ற தொழில் முகவர்களுக்கு எதிராக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4397/ '13

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வியல் கல்லூரிகளில் பயிற்சிபெறும் பயிலுநர் ஒருவருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணத் தொகையை செலுத்த ஆரம்பித்த திகதி யாது;

(iii) மேற்படி பணத் தொகையை செலுத்த ஆரம்பிப்பதற்கு முன்னர் செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்வாரிப் பயிற்சிக் காலத்தினுள் கல்வியல் கல்லூரி பயிலுநர் ஆசிரியர் ஒருவருக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவாக செலுத்தப்படும் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணத் தொகை செலுத்தப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) தற்போதைய வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடுகையில் தற்போது செலுத்தப்படும் பணத் தொகை போதுமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், தற்போது இவர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவு அல்லது சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(v) ஆமெனில், அத் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4680/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்தின் சிறுநீரக நோய் தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு உலக சுகாதார அமைப்பிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கையை தயாரிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அறிக்கையை தயாரிப்பதற்கு உலக சுகாதார அமைப்பினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறுநீரக நோய் தொடர்பாக உலக சுகாதார அமைப்பினால் வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த அறிக்கைகள் சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற திகதிகள் யாவையென்பதையும்;

(iii) உலக சுகாதார அமைப்பின் மேற்படி அறிக்கைகளை சுகாதார அமைச்சு ஏற்றுக்கொள்கின்றதா என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விடயங்களுக்கமைய தற்போது சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) ஆரம்ப அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) அதற்கு யாதேனுமொரு தரப்பினரிடமிருந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4770/ ’14

கௌரவ அசோக் அபேசிங்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையினால் பாடசாலைகளுக்கான பேரூந்துகள் மட்டும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற பாதைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தற்போது பாடசாலைகளுக்கான பேரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படாதுள்ள பாதைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி பாதைகளில் பாடசாலைகளுக்கான பேரூந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4959/ ’14

கௌரவ நிரோஷன் பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் வென்னப்புவ பஸ் டிப்போவில் ஈடுப்படுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது இந்த டிப்போவினால் நாளாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) தற்போது இந்த டிப்போவில் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இந்த பஸ் டிப்போவில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) இவர்களின் மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தேவைப்படும் பணத் தொகை யாது என்பதையும்;

(vi) இந்த பஸ் டிப்போவின் மாதாந்த இலாபம் அல்லது நட்டம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2014 நவெம்பர் 14, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2678/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஓய்வூதியம் செலுத்துகையில், ஏதேனும் ஒரு மாதத்தின் 01 ஆம் திகதியில் ஓய்வுபெற்ற ஒருவருக்கு குறித்த மாதத்தில் ஓய்விலிருந்த நாட்களின் எண்ணிக்கை அல்லது மாதம் முழுவதற்குமாக குறைக்கப்படாத ஓய்வூதியம் செலுத்தப்படுவதுடன், 02 ஆம் திகதியில் ஓய்வுபெற்ற ஒருவருக்கு அதனையடுத்த மாதம் தொடக்கம் மாத்திரம் குறைக்கப்படாத ஓய்வூதியம் செலுத்தப்படுகின்றதென்பதையும்;

(ii) மாதத்தின் முதலாம் திகதி அல்லாத தினத்தில் ஓய்வுபெறுபவர்களுக்கு இந்நிலைமை பெரும் அநீதியாகுமென்பதையும்;

(iii) ஓய்வூதிய கொடுப்பனவை கணிப்பிட வேண்டியது இவ்வாறான அநீதியான முறைமைக்கு ஏற்பவே என்று ஓய்வூதியக் கோவையின் எந்தவொரு பிரிவிலும் குறிப்பிடப்படவில்லையென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனின், ஓய்வூதியக் கோவையின் 31 ஆவது பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி அல்லது பொருத்தமான வேறொரு முறையில் கடந்த காலத்திற்கும் பொருந்தக்கூடியவாறு மேற்படி அநீதியை இல்லாதொழித்து இதற்கமைவாக ஓய்வுபெற்றவர்களுக்கு உரித்தாக வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3317/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011.05.31ஆம் திகதியில் இருந்து இற்றைவரை இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் முதலீட்டு ஊக்குவிப்புச் சபையுடன் உடன்படிக்கைகளைக் கோரிய மற்றும் மேற்கொண்ட அரச தொழில் முயற்சிகள் மற்றும் கம்பனிகளின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும் பிரிவு அடிப்படையிலும்;

(ii) மேலே (i) இல் சொல்லப்பட்டவற்றில் இற்றைவரை வணிகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்த தொழில் முயற்சிகளின் எண்ணிக்கையையும்;

(iii) மேலே (i) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் பெறுமதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே சொல்லப்பட்ட கம்பனிகள் அனுபவித்த வரி விடுமுறைகளையும்;

(ii) 2010.01.01 முதல் 2012.12.31 வரையான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட மற்றும் தொழிற்பாடுகளை ஆரம்பித்த கம்பனிகளின் எண்ணிக்கையை ஆண்டுவாரியாகவும் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டப் பிரிவின் பிரகாரமும்

வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3922/ '13

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கண்டி நகரத்தில் சேருகின்ற குப்பை கூளங்கள் கண்டி கொஹாகொட பிரதேசத்தில் மகாவலி கங்கைக்கு அருகாமையிலுள்ள இடமொன்றில் அகற்றப்படுகின்றதென்பதையும்;

(ii) அவ்விடத்தில் விலங்குப் பண்ணையொன்று பேணிவரப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இடத்தில் விலங்குப் பண்ணையொன்றை பேணிவருவதற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி விலங்குப் பண்ணை உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) மேற்படி விலங்குப்பண்ணையின் உரிமையாளர் இந்த தொழில்முயற்சிக்கு மேலதிகமாக வேறு நிறுவனமொன்றில் தொழில் புரிவாராயின் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் அவர் வகிக்கும் பதவி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4506/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்காக புதிதாக பத்து ஆகாய விமானங்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ள மேற்படி ஆகாய விமானங்களுக்காக செலவிட உத்தேசித்துள்ள பணத் தொகை யாது;

(iii) மேற்படி ஆகாய விமானங்கள் எந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) விமானக் கம்பனி 2013 சனவரி முதல் இற்றைவரை அடைந்துள்ள நட்டம் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அதிகளவு நட்டத்துடன் பேணிவரப்படுகின்ற ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்காக புதிதாக ஆகாய விமானங்களைக் கொள்வனவு செய்ய நிதி ஏற்பாடுகள் பெறப்படுகின்ற விதம் யாது;

(iii) மேற்படி புதிய ஆகாய விமானங்கள் கொள்வனவு செய்யப்படுவதை அங்கீகரிக்கிறாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4758/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) ஹோமியோபதி மருத்துவச் சபை தாபிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தற்போது ஹோமியோபதி மருத்துவச் சபை இயங்கி வருகின்றதா என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டளவில் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோமியோபதி மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) ஹோமியோபதி மருத்துவ முறையை பிரபல்யப்படுத்துவதற்காக அமைச்சு ஏதேனும் வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5031/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தில் கடமையாற்றும் விலங்கு மருத்துவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) தற்போது மேற்படி திணைக்களத்தில் விலங்கு மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா;

(iii) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள யானைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் தற்போது காச நோயினால் பீடிக்கப்பட்டுள்ள யானைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான போதியளவு வசதிகள் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் காணப்படுகின்றதா;

(iv) காசநோயினால் பீடிக்கப்பட்ட யானைகளிடமிருந்து மிருகக்காட்சி சாலையில் உள்ள ஏனைய விலங்குகளுக்கு இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பின்னவலை யானைகள் சரணாலயத்தில் உள்ள யானைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி யானைகளுக்கு மத்தியில் காச நோயினால் பீடிக்கப்பட்ட யானைகள் இருப்பதாக அறியவந்துள்ளதா;

(iii) பின்னவலை யானைகளை காச நோயிலிருந்து பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5171/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பரீட்சைகளில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விடையளிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஆங்கில மொழியில் மட்டும் வினாத்தாள்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தீர்மானத்திற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி தீர்மானத்திற்கு நீதி அமைச்சரின் இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5184/ '14

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரள,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறு தேயிலைத் தோட்டங்களில் மண் மற்றும் நீரின் பாதுகாப்புக்கு அரசாங்க நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டமொன்று 2014 வரவு – செலவுத் திட்ட பிரேரணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், ஒரு ஏக்கர் தேயிலைக்கு வழங்கப்படும் பணத்தொகை யாது;

(iii) தற்போது மேற்படி வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ள மாவட்டங்கள் யாவை;

(iv) மேற்படி மாவட்டங்களில் குறித்த நிவாரணத்தொகை முழுமையாக வழங்கப்பட்டுள்ள மற்றும் பகுதியளவில் வழங்கப்பட்டுள்ள மாவட்டங்கள் வெவ்வேறாக யாவை;

(v) மேற்படி நிவாரணம் வழங்கப்படும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 08 மாவட்டங்ளைச் சேர்ந்த சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு மேற்படி நிவாரணப் பணத்தொகை வழங்கப்பட வேண்டிய போதிலும், கடந்த காலப் பகுதியில் மாகாண சபை தேர்தல்கள் இடம் பெற்ற மாகாணங்களுக்கு மாத்திரம் இதற்கான முற்பணத் தொகையை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய மாவட்டங்களில் குறித்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2014 நவெம்பர் 15, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2756/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "புரவர புபுதுவ" - நகர எழுச்சித் திட்டத்திற்கு 2012ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத்தொகை யாதென்பதையும்;

(ii) இவ்வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் போது கடைப்பிடிக்கப்பட்ட பிரதானமான அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iii) "புரவர புபுதுவ" - நகர எழுச்சி வேலைத் திட்டத்திற்கு இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) இவ்வேலைத்திட்டத்தில் உள்ளடக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3555/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 3 ஆண்டுகளில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள பசுக்களின் எண்ணிக்கையை ஆண்டு வாரியாகவும்;

(ii) வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பசுவொன்றின் விலையையும்;

(iii) மேற்கூறிய பசுவின் சாதாரண விலையையும்;

(iv) கொள்வனவு செய்யப்பட்ட இடத்திலிருந்து உரிய பண்ணைக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு பசுவுக்கான மொத்தச் செலவையும்;

(v) அவை கொள்வனவு செய்யப்பட்ட நாட்டையும்;

(vi) பசுக்கொள்வனவுக்கு அந்நாட்டை தெரிவு செய்தமைக்கான காரணத்தையும்;

(vii) மேற்கூறிய கொள்வனவு பொருத்தமான கேள்விப் பத்திர நடைமுறையினூடாக மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்; மற்றும்

(viii) இன்றேல் அக்கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட அடிப்படையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4398/ '13

கௌரவ புத்திக பதிரண,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தில் பணியாற்றுகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு கிடைக்க வேண்டிய ஐந்து சம்பள ஏற்றங்கள் குறித்த நிறுவனத்தின் நிருவாகத்தினால் இழக்கச்செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) குறித்த உத்தியோகத்தர்கள் அது சம்பந்தமாக தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்த பின்னர் அந்த சம்பள ஏற்றங்களை வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர், குறித்து 05 சம்பள ஏற்றங்கள் வழங்கப்படுவதை தொடர்ந்தும் தவிர்த்து வருவதாக சம்பந்தப்பட்ட பணியாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்க வேண்டிய சம்பள ஏற்றங்களை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4948/ '14

கௌரவ சுஜீவ சேனசிங்க,—பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டமானது தற்போது ரூபா 95 பில்லியனை விஞ்சியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் வங்கி மேலதிக பற்றுகளுக்காக மட்டும் ரூபா 43 கோடிக்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டியுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது அரச வங்கிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடன் வழங்குவதை நிராகரித்துள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், மேற்படி நிலைமையின் கீழ் உயர் கடன் வட்டி நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு பெற்றோலியக் கம்பனிகளிலிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5102/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய்க் களஞ்சியத் தொதிக்கு உரித்தான மொத்த காணியின் அளவு யாது;

(ii) மேற்படி காணிக்கான நிலஅளவை வரைபடமொன்று உள்ளதா;

(iii) இன்றேல், குறிப்பிட்ட காணிக்கான நில அளவைப் பணிகளை மேற்கொண்டு அத்தகைய வரைபடமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) திருகோணமலை எண்ணெய்க் களஞ்சியத் தொகுதிக்குரிய எண்ணெய்த் தாங்கிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட எண்ணெய்த் தாங்கிகளில் தற்போது பயன்படுத்தப்படும் எண்ணெய்த் தாங்கிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி எண்ணெய்த் தாங்கிகளில் லங்கா ஐ.ஓ.சீ. கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை யாது;

(iv) குறிப்பிட்ட கம்பனிக்கு எண்ணெய்த் தாங்கிகள் வழங்கப்பட்ட ஒப்பந்தக் கால வரையறை தற்போது முடிவடைந்துள்ளதா;

(v) ஆமெனில், குறித்த ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தி குறித்த கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5178/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அற்றோனித் தத்துவம் தொடர்பாக நாட்டில் தற்போது வலுவிலுள்ள சட்டம் காலம் கடந்ததொரு சட்டமாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அற்றோனி ஆணையுடன் தொடர்புடைய சட்டத்தை மாற்றியமைப்பதுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி குழுவின் முதலாவது கூட்டம் நடாத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி குழுவின் நடவடிக்கைகள் தேக்கநிலை அடைவதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அற்றோனி ஆணையுடன் தொடர்புடைய சட்டத்தை திருத்துவதற்காக துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை உருவாகியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5197/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் உள்ள பண மீதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்தின் பணம், பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இந்நிதியத்தினால் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) 2013 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்படி ஒவ்வொரு முதலீட்டினதும் முன்னேற்றம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிதியத்தின் பணம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கென முகவர்களின் உதவி பெறப்பட்டதா என்பதையும்

(iii) மேற்படி முகவர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5262/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கிளிநொச்சி, அக்கராயன், ஸ்கந்தபுறம் மற்றும் ஆனைவிழுந்தான் ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்கள் தமது போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(ii) அந்த மக்களுக்கு, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அல்லது தனியார் துறையின் பேருந்து வண்டிகளை எதிர்பார்த்து பல மணித்தியாலங்கள் வீதியில் காத்திருக்க நேரிட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?